# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2002 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்டம்

---

(2002, ஒற்றோபர் மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2002, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 6.25** **தபாற் செலவு : ரூபா 4.50**

## 2002 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்டம்

[2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 4 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வி. ஓ. 46/2000

## தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :–

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 68 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :– 128 ஆம் அத்தியாயத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :–

"(1) வேலை செய்த மணித்தியாலங்கள் மற்றும் தொழிலின் காலப்பகுதிகள் தொடர்பான இப்பாகத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், ஏதேனும் தொழிற்சாலையின் வேலைப்பழுவானது பெண்கள் மற்றும் பதினாறு வயதை அடைந்த ஆனால் பதினெட்டு வயதை அடையாத இளம் ஆட்களின் மேலதிக நேர வேலைகளின் மூலம் கையாளப்படலாம் :

ஆயின், பெண் ஒருவரால் செய்யப்படும் மேலதிக வேலையின் நேரம் ஏதேனும் பஞ்சாங்க மாதத்தில் கூட்டுமொத்தமாக அறுபது மணித்தியாலங்களை விஞ்சுதலாகாது என்பதுடன், பதினாறு வயதை அடைந்தவர்களும் ஆனால் பதினெட்டு வயதை அடையாதவர்களுமான இளம் ஆட்களால் செய்யப்படும் மேலதிக வேலையின் நேரம் ஏதேனும் பஞ்சாங்க மாதத்தில் கூட்டுமொத்தமாக ஐம்பது மணித்தியாலங்களை விஞ்சுதலுமாகாது.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :–

2-H 016425-700 (2002/07)

"(அ) உணவு மற்றும் ஓய்வு என்பவற்றுக்காக அனுமதிக்கப்பட்ட இடைவேளைகள் நீங்கலாக, மேலதிக நேரம் உள்ளடங்கலாக பெண் ஒருவரால் அல்லது இளம் ஆட்களால் செய்யப்பட்ட வேலை மணித்தியாலங்களின் மொத்த எண்ணிக்கை ஏதேனும் வாரத்தில் அறுபது மணித்தியாலங்களை விஞ்சுதலாகாது.":

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :–

"(2அ) வேலைதருநர் ஒருவர், மேலதிக நேர வேலையில் ஈடுபடுவதற்கு அவருடைய சம்மதத்தை எழுத்தில் கொடுத்திருந்தாலன்றி –

(அ) கர்ப்பிணிப் பெண் ஒருவரை அவருடைய கர்ப்ப காலத்தின்போது ; அத்துடன்

(ஆ) பாலூட்டும் தாய் ஒருவரை, பிள்ளை பிறந்த திகதியிலிருந்து கணிக்கப்படும் ஓராண்டுக் காலத்திற்கு ; அத்துடன்

(இ) இறந்து பிறந்த பிள்ளை ஒன்றைப் பிரசவித்த பெண் ஒருவரை, அத்தகைய இறந்து பிறந்த பிள்ளையின் பிறப்புத் திகதியிலிருந்து கணிக்கப்படும் மூன்று மாத காலத்திற்கு,

மேலதிக நேர வேலையில் ஈடுபடுத்துதலாகாது ; " ; அத்துடன்

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :–

"(4) அமைச்சரானவர் ஒழுங்குவிதி மூலம் –

(அ) அத்தகைய மேலதிக நேர வேலையானது, அத்தகைய பெண்கள் அல்லது இளம் ஆட்களின் ஆரோக்கியத்தைப் பங்கமான முறையில் பாதிக்கும் எனத் தோன்றினால், பெண்கள் அல்லது இளம் ஆட்கள் அல்லது அதன் ஏதேனும் வகுப்பைச் சேர்ந்தவர்களின் மேலதிக நேர வேலையைத் தடை செய்யலாம் அல்லது கட்டுப்படுத்தலாம் ;

(ஆ) பெண் ஒருவர் அல்லது இளம் ஆள் ஒருவர் மேலதிக நேர வேலையில் ஈடுபடுத்தப்படுகின்ற நேரங்களில் ஓய்வறை வசதிகளை வழங்குதல் உட்படத் தொழிற்சாலையினுள் பேணப்பட வேண்டிய நிபந்தனைகளை விதித்துரைக்கலாம் ;

(இ) இரவில் மேலதிக நேர வேலையில் ஈடுபடுகின்ற பெண்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்வதற்கான முறையை விதித்துரைக்கலாம்.".

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.